வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: செங்கேணி பழனி

நாள்: 01.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஜமைக்கா பிரதமருக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

மக்கள், முந்தைய தலைமுறையினரின் விவேகம், நெகிழ்வுத் தன்மை, மற்றும், பங்களிப்புகளை கவுரவிக்க வேண்டிதன் அவசியத்தை மத்திய சமூக நீதி துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்வச்சதா ஹி சேவா இயக்கத்தில், நாடு முழுவதும் இதுவரை, 20 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று உள்ளதாக, மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம், மற்றும் சீருடை வழங்கும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு.ரங்கசாமி, தொடக்கி வைத்தார்.

-----------------------------

*மோடி-ஜமைக்கா* 1 (16)

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், தற்போது இந்தியா வந்துள்ள ஜமைக்கா பிரதமர் டாக்டர் ஆண்ட்ரூ ஹோல்னெஸ்-சுக்கும் இடையே,

பிரதிநிதிகள் நிலையில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, டிஜிட்டல் உள்கட்டமைப்பு, கலாச்சார பரிமாற்றம், மற்றும், விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பு தொடர்பாக, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

ஜமைக்கா பிரதமர் டாக்டர் ஹோல்னெஸ், முதல் முறையாக இந்தியாவிற்கு இருதரப்புப் பயணம் மேற்கொண்டுள்ளதால், இந்தியா இப்பயணத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, பின்னர் கூட்டறிக்கை ஒன்றில் கூறினார். இந்தியாவிற்கும்-ஜமைக்காவிற்கும் இடையிலான உறவுகள், பொதுவான வரலாற்றையும், ஜனநாயக மாண்புகள், மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகளையும் அடிப்படையாக கொண்டவை என்று அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு, சிறு தொழில், உயிரி எரிபொருள், கல்வி, சுகாதாரம், வேளாண்மை, புதுமையாக்கம் உள்ளிட்ட துறைகளில்,

மோடி-ஜமைக்கா 2 (17)

இந்தியா தனது அனுபவங்களை ஜமைக்காவுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாகவும், அவர் கூறினார். ஜமைக்கா ராணுவத்தினருக்கு பயிற்சிஅளிக்கும் பணிகளை, இந்தியா தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதம், போதை மருந்துக் கடத்தல், திட்டமிட்ட குற்றங்கள் போன்ற சவால்களை இருநாடுகளும் சந்திப்பதால், இப்பிரச்சனைகளை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள, இருநாடுகளும் இணங்கி இருப்பதாக, பிரதமர் தெரிவித்தார். உலக அமைதி, மற்றும் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை, இருநாடுகளும் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும், ஐநா பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் தேவை என்பதே இருநாடுகளின் பொதுவான கருத்து என்றும் அவர் கூறினார்.

புதுடெல்லியில் ஜமைக்கா தூதரகத்திற்கு எதிரே உள்ள சாலைக்கு. ஜமைக்கா மார்க் என பெயர் சூட்டப்படும் என்றும், பிரதமர் அறிவித்தார்.

இந்தியாவுடனான சகோதர உறவுகளுக்கு ஜமைக்கா மிகுந்த மதிப்பு அளிப்பதாக, ஜமைக்கா பிரதமர் கூறினார். கடந்த 2 நூற்றாண்டுகளாக. ஜமைக்காவின் கல்வி, சுகாதாரம், வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில், இந்தியர்கள், சிறந்த முறையில் முத்திரை பதித்து இருப்பதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------------

*ராஜ்நாத்-வாயு வீர்* (17)

இந்திய விமானப் படையின் 92 ஆண்டு காலப் புகழ்மிகு வரலாறு குறித்து, மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், விமானப் படையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, வாயு வீர் விஜேதா கார் பேரணியை

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று, புதுடெல்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் இருந்து வழியனுப்பி வைத்தார். இளைஞர்கள் தங்களின் திறமைகளை சிறப்பாக பயன்படுத்துவதன் மூலம், பாதுகாப்புப் படைகளில் சேர்ந்து, கவுரவம், பெருமிதம், மற்றும், நாட்டுப் பற்றுடன் கூடிய வாழ்க்கையை தேர்ந்தெடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இன்று புதுடெல்லியில் இருந்து வழியனுப்பி வைக்கப்பட்ட வாயு வீர் விஜேதா கார் பேரணி, உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள விமானப் படை நிலையங்களில் ஒன்றான, தோய்ஸ் விமானப் படை நிலையத்தை சென்றடைந்து, அங்கிருந்து, முறைப்படி கொடியசைத்து தொடக்கி வைக்கப்படும். கார் பேரணிக் குழுவினர், நாட்டின் பல்வேறு பகுதிகள் வழியாக, 7 ஆயிரம் கிலோ மீட்டர் விழிப்புணர்வுப் பயணம் மேற்கொண்டு, இம்மாதம் 29ஆம் தேதி, அருணாச்சல பிரதேசத்தின் தவ்வாங் பகுதிக்கு சென்றடைய உள்ளனர்.

------------------------------

*விவசாயிகள்* (10)

மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் இன்று புதுடெல்லியில், விவசாயிகள், மற்றும், விவசாய சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து, விதைகள், மற்றும், பூச்சிக் கொல்லி மருந்துகளின் வினியோக நிலவரம் குறித்தும், ரசாயன உரங்களின் அதீதப் பயன்பாட்டை தவிர்ப்பது குறித்தும் விவாதித்தார். விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்ப்பதில், அரசு

உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினார். அரசுடனான பேச்சு வார்த்தைகள், பயனுள்ள வகையில் அமைந்து இருந்ததாகவும், விவசாயிகளின் பிரச்சனைகளை விரைந்து தீர்க்க, அமைச்சர் உறுதி அளித்து இருப்பதாகவும், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

-----------------------------

*முதியோர் தினம் (19)*

மக்கள், முதியோர் உடனான தருணங்களை கொண்டாடி, முந்தைய தலைமுறையின் விவேகம், நெகிழ்வுத் தன்மை, மற்றும், பங்களிப்புகளை கவுரவிக்க வேண்டும் என, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் உரையாற்றிய அவர், சமூகத்தை வடிவமைப்பதில், மூத்த குடிமக்களின் பங்கு மிக முக்கியமானது என்றும், மூத்த குடிமக்களின் கண்ணியம், மரியாதை, மற்றும் நலவாழ்விற்கு, அனைவரும் முன்னுரிமை அளித்தல் அவசியம் என்றும் கூறினார். முந்தைய தலைமுறையின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதன் மூலமாகவே, எதிர்கால தலைமுறைகளுக்கு வலுவான, கலாச்சார அடித்தளம் ஒன்றை அமைத்துக் கொடுக்க இயலும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். முதியோர் நலவாழ்வை உறுதிப்படுத்த, அரசு முக்கியத்துவம் அளிப்பதாகவும், அடுத்த ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தன்று, பள்ளிகளில் பெரிய அளவிலான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

செய்ய, அரசு திட்டமிட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு. பி.எல். வர்மா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், முதியோரை கவனித்துக் கொள்வது, இந்தியக் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், எந்த ஒருவரும், முதியவர்களுக்கு அளிக்கக் கூடிய மிகச் சிறந்த பரிசு நேரம்தான் என்றும் கூறினார்.

-----------------------------

*ஸ்வச்சதா ஜல் சக்தி* (11)

2024ஆம் ஆண்டு ஸ்வச்சதா ஹி சேவா இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை, 24 லட்சத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணி நிகழ்வுகள் நடத்தப்பட்டு, இதில் 20 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று உள்ளதாக, மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார். நாளைய ஸ்வச் பாரத் தின கொண்டாட்டங்களுக்கான முன்னோட்டமாக, இன்று புதுடெல்லியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ஸ்வச்சதா ஹி சேவா இயக்கத்தில் 38 லட்சத்தீற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களும் பங்கேற்றுள்ளதாக தெரிவித்தார். நாடு முழுவதிலும், மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள், மற்றும், பல்வேறு சமூக குழுக்களும், இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளதாக கூறினார்.

-----------------------------

*புதுச்சேரி-ஸ்வச்தா* (12)

ஸ்வச்தா ஹி சேவா-தூய்மைப் பணி இருவார விழாவின் ஒருபகுதியாக, புதுச்சேரியில், சுகாதாரத் துறை, மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில், உழவர்கரை நகராட்சி வளாகத்தில் இன்று நடைபெற்ற சஃபாய் மித்ரா சுரக்க்ஷா முகாமில், முதலமைச்சர் திரு.ரங்கசாமி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம், மற்றும் சீருடை வழங்கும் பணிகளை தொடக்கி வைத்தார். புதுச்சேரி மாநிலத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும், பராமரிக்க அவர் வலியுறுத்தினார். சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர், உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு. சக்திவேல், அரசு பொது மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் செவ்வேல் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மருத்துவ முகாமில், தூய்மைப் பணியாளர்கள் சுமார் 200 பேருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப் பட்டது.

-----------------------------

*சிவாஜி கணேசன்* (9)

புதுச்சேரியில், செவாலியே சிவாஜி கணேசன் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. கிழக்கு கடற்கரை சாலை-கருவடிக்குப்பம் சாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன்-திரு. சாய்

சரவணன் குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், முதலமைச்சரின் பாராளுமன்ற செயலர் திரு. ஜான்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி ரமேஷ்-திரு.லட்சுமி காந்தன் ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------

*ஆட்டோ பேரணி* (12)

புதுச்சேரியில், வாடகை டூ வீலர், மற்றும், இ-பைக் திட்டங்களை தடை செய்யக் கோரி, ஆட்டோ தொழிலாளர்கள் இன்று, வேலை நிறுத்தம் மேற்கொண்டு, சட்டப் பேரவை நோக்கி பேரணி, மற்றும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியத்தை செயல்படுத்துதல், 4 ஆயிரம் ரூபாய் தீபாவளி உதவித் தொகை வழங்குதல், ஆட்டோக்கள் மீதான ஸ்பாட் ஃபைன் கைவிடுதல் உள்ளிட்ட கோரிக்கைகளையும் இவர்கள் வலியுறுத்தினர். நெல்லித்தோப்பு சுப்பையா சிலை அருகில் இருந்து, ஆட்டோக்களுடன் பேரணியாக புறப்பட்டு வந்த ஆட்டோ தொழிலாளர்களை, போலீசார் பாதியிலேயே தடுத்து நிறுத்தியதை தொடர்ந்து, இவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். ஆட்டோ தொழிலாளர் பேரணியால் புதுச்சேரியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

-----------------------------

*சமஸ்கிருதம்* (13)

மானுட மேம்பாட்டில், சமஸ்கிருதத்தின் பங்கு என்ற தலைப்பில், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருதத் துறையும், ஆர்ய சமாஜத்தின் வேதிக் வித்யா கேந்திராவும் இணைந்து, புதுச்சேரியில் 3 நாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தின. புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் தரணிக்கரசு இக்கருத்தரங்கை தொடக்கி வைத்து பேசுகையில், 2047-ல் வளர்ச்சி அடைந்த இந்தியா என்னும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இலக்கை எட்ட, 13-14ஆம் நூற்றாண்டுகளில் நாம் இழந்த பாரம்பரியக் கலாச்சாரத்தை மீட்டெடுத்தல் அவசியம் என்றார். இந்தியப் பாரம்பரிய மருத்துவம் மூலம், தீர்க்க முடியாத நோய்களையும் குணப்படுத்த முடியும் என்ற நிலையில், ஆங்கில மருத்துவத்தை நாம் ஏற்றுக் கொண்டதே, நமது பலவீனம் என்று அவர் கூறினார். தற்போது, கலாச்சாரத்தில் வளர்ச்சி அடைந்த நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் மேற்கத்திய நாடுகள், ஒருவொருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டுதான் இருப்பதாக துணைவேந்தர் குறிப்பிட்டார்.

-----------------------------

*ஜம்மு-காஷ்மீர்* (4)

ஜம்மு-காஷ்மீரில், 7 மாவட்டங்களுக்கு உட்பட்ட 40 தொகுதிகளில், இன்று நடைபெறும் 3ஆவது மற்றும் இறுதிக்கட்ட சட்டமன்றத் தேர்தல்

வாக்குப்பதிவில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி, 56 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

-----------------------------

*வானிலை (11)*

குமரிக் கடல், மற்றும் உள் தமிழக பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள்,மற்றும், நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளைய தினம், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, சேலம், ஈரோடு, தர்மபுரி,கிருஷ்ணகிரி, மற்றும், திருப்பத்தூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், கனமழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 7ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

-----------------------------

*கிரிக்கெட் (8)*

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே, கான்பூரில் நடைபெற்ற 2ஆவது, மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2க்கு பூஜ்யம் என்ற கணக்கில், தொடரை கைப்பற்றி உள்ளது. இப்போட்டியின் 5ஆம் நாளான

இன்று, பங்களாதேஷ் அணி, 146 ரன்னுக்கு, 2ஆவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்ததை தொடர்ந்து, 95 ரன் என்னும் வெற்றி இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸ் ஆடிய இந்திய அணி, 3 விக்கெட் இழப்பிற்கு, 98 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஜமைக்கா பிரதமருக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

மக்கள், முந்தைய தலைமுறையினரின் விவேகம், நெகிழ்வுத் தன்மை, மற்றும், பங்களிப்புகளை கவுரவிக்க வேண்டிதன் அவசியத்தை மத்திய சமூக நீதி துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்வச்சதா ஹி சேவா இயக்கத்தில், நாடு முழுவதும் இதுவரை, 20 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று உள்ளதாக, மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம், மற்றும் சீருடை வழங்கும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு.ரங்கசாமி, தொடக்கி வைத்தார்.